



தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைப்பு




உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் இன்று (24) காலை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். உள்ளுராட்சிமன்றத் தேர்தல் அறிவிப்புக்கு பிறகு அரசியல் கட்சிகளை தேர்தல் ஆணைக்குழு சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

எதிர்வரும் உள்ளுராட்சி மன்றத் தேர்தல் எவ்வாறு நடத்தப்படும் என்பது குறித்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு விரிவாக அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான உள்ளுராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கையும் நேற்று (23) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தது. இதேவேளை, உத்தியோகபூர்வ

## ஜனவரி 27 ஆம் திகதிக்கு முன் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள்



2022ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் ஜனவரி 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கான விடைத் தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே சமூக வலைதளங்களில் பரப்பப்படும் பொய்யான செய்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்றது. 2,894 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற இத்தேர்வுக்கு மூன்று லட்சத்து 34,698 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை வீழ்த்திய இந்தியா

இலங்கைக்கு எதிரான மகளிர் A-19 b20 உலகக் கிண்ண ஆட்டத்தில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. தனது முதல் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்க அணியை எளிதாக வீழ்த்திய இந்திய அணி, 2 வது ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரக அணியை 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.



3 வது ஆட்டத்தில் ஸ்கொட்லாந்தை 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஆனால் 4 வது ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் 7 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது. தனது அடுத்த ஆட்டத்தில் இலங்கையை எதிர்கொண்டது இந்திய A-19 மகளிர் அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 59 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. பர்ஷவி சோப்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்திய அணி 7.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 60 ஓட்டங்கள் எடுத்து பெரிய வெற்றியை அடைந்தது. ஷஃபாலி 15 ஓட்டங்களுக்கும் ரிச்சா கோஷ் 4 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தார்கள்.

## சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்



தேர்தல் ஆணைக்குழு உட்பட பல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட உள்ளனர். 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி நிறுவப்பட்ட அரசியலமைப்புச் சபையினால் நியமனங்கள் செய்யப்படவுள்ளன. அரசியலமைப்பு பேரவை நாளை (25) காலை 09.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளதாக பாராளுமன்ற பிரதி பொது செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 10 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவைக்கு இதுவரை 09 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சி அல்லாத ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பில், நாளைய தினம் கூடவுள்ள அரசியலமைப்பு சபையில் கவனம் செலுத்தப்படவுள்ளது. பல ஆணைக்குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான ஜனாதிபதியின் பரிந்துரைகளை அரசியலமைப்பு சபை அங்கீகரிக்க வேண்டும். இதன்படி, தேர்தல், எல்லை நிர்ணயம், பொதுச் சேவை, பொலிஸ், கணக்காய்வு சேவைகள், நிதி, கொள்வனவு, மனித உரிமைகள், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக 9 ஆம் திகதி போராட்டம்

அரசாங்கத்தின் பிழைப்புக்காக மேற்கொள்ளப்படும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தேசிய எதிர்ப்பு தினத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டணி தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து எதிர்வரும் 9 ஆம் திகதி போராட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

இந்த நாட்டில் செலவழிக்கப்படும் வரிப்பணத்தில் கிடைக்கும் நன்மைகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம பன்னெஹெக்க தெரிவித்துள்ளார்.

## சிறுபோக நெற்செய்கைக்கு இலவச உர விநியோகம் - அமைச்சர் மஹிந்த அமரவீர

நெற்பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற உரமான (Triple Super Phosphate (TSP) ஐ எதிர்வரும் சிறுபோக பயிர்செய்கைக்கு அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தின்போது நெற்செய்கையாளர்களுக்கு உரம் விநியோகிக்கப்படவிருந்த போதிலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான யுத்தத்தால், அந்நாடு உரம் ஏற்றுமதி இடைநிறுத்தியிருந்தது. அதனால் எமக்கு அதனை இறக்குமதி செய்ய முடியவில்லை. தற்போது 36,000 மெட்ரிக் டொன் உரம் அடங்கிய கப்பல் ஒன்று அடுத்த மாதம் முதல் இரண்டு வாரங்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு போகத்திற்கு தேவையான உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

லங்கா உர நிறுவனம் மற்றும் கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உர விநியோகம் தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வருடம் பெரும்போகத்திற்கு 125,000 மெட்ரிக் டொன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டது. அதில் 75 வீதம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது 5 வீத MOP உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்முறை 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான அனைத்து உரங்களையும் விநியோகிக்க விவசாய அமைச்சு தயாராக உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின் கட்டண திருத்தப் பிரேரணையை விரைவுபடுத்தத் தீர்மானம்

2009 மின்சாரச் சட்டத்தின் படி, இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட கட்டணத் திருத்தப் பிரேரணையை விரைவுபடுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. அத்துடன், இடைக்கால கட்டண திருத்தம் தொடர்பான அமைச்சரவையின் கோரிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சட்ட ஆலோசனையைப் பெறவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

## இலங்கையில் டிசம்பர் மாத பணவீக்கத்தில் மாற்றம்

இலங்கையின் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் 59.2% ஆக குறைவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பரில் தேசிய நுகர்வோர் விலைக் குறியீடு 65% ஆக பதிவாகி இருந்தது. மேலும், நவம்பரில் 69.8% ஆக இருந்த நாட்டின் உணவுப் பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் 59.3% ஆகக் குறைந்துள்ளது.

## அமெரிக்காவில் பள்ளியில் துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் அயோவாவில் உள்ள டெஸ் மொயின்ஸ் பட்டயப் பள்ளியில் நேற்று பிற்பகலில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். தகவலறிந்த பொலீசார் உள்ளூர் நேரப்படி மதியம் 1 மணிக்கு ஸ்டார்ட்ஸ் ரைட் ஹியர் பள்ளிக்கு விரைந்தனர்.

அங்கு துப்பாக்கி சூட்டில் பலத்த காயமடைந்த 3 பேரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அவர்களில் 2 மாணவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மற்றொருவர் அந்த பள்ளியில் வேலை செய்யும் ஊழியராவார். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 3 சந்தேகத்துக்குரிய நபர்களை பொலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறைசேரிக்கு மூன்று பில்லியன் ரூபாய் அன்பளிப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், திறைசேரிக்கு 03 பில்லியன் ரூபா பெறுமதியான காசோலையை அன்பளிப்புச்செய்துள்ளது. இதற்கான காசோலையை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று (23) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, மருந்து கொள்வனவு, அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல், நெல் கொள்வனவு போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கடந்த வருடம் ஈட்டிய செயற்பாட்டு வருமானத்தில் இருந்து மேலதிக தொகை இவ்வாறு வழங்கப்பட்டது.

இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் திறைசேரிக்கு வழங்கிய மொத்தத் தொகை 3382 மில்லியன் ரூபாவாகும். மூன்று பில்லியன் ரூபா ஒரேயடியாக வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

புற்றுநோய் வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 500 மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதில் 100 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையும் இதன் போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இந்தக் காசோலையை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கையளித்தார்.

## உலகிலேயே அதிக ரசிகர்களை கவர்ந்துள்ள விளையாட்டாக விளங்குவது கால்பந்தாட்டம்



கால்பந்தின் பிரசித்திபெற்ற வீரர்களாக ரொனால்டோ, நெய்மர், மெஸ்ஸி மற்றும் எம்பாப்பே ஆகிய நால்வரும் விளங்குகின்றனர். இந்த நிலையில், இந்த நால்வரில் யாருக்கு ஊதியம் அதிகம் என்ற ஒப்பீடும் ரசிகர்கள் மத்தியில் சுவாரஸ்யமாக பகிரப்பட்டு வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் வைத்து நடைபெற்ற கால்பந்து போட்டியில் உலகின் தலைசிறந்த 4 வீரர்கள் விளையாடியதை கண்டு மகிழ்ச்சியில் அரபு உலகம் திக்குமுக்காடிப் போயுள்ளது.

இதற்கிடையில் இந்த நான்கு நட்சத்திர கால்பந்து வீரர்களுக்கு மத்தியில் யாருக்கு ஊதியம் அதிகம் என்று ரசிகர்கள் அடிக்கடி சுவாரஸ்யமாக ஒப்பீடு நடத்துவதும் தொடர்ந்து அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

கத்தார் உலக கோப்பை போட்டிகளுக்கு பிறகு, சவுதி அரேபியாவை சேர்ந்த அல்-நாசர் அணிக்காக விளையாட போர்ச்சுக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒப்புக் கொண்ட பிறகு, கால்பந்து வரலாற்றில் இதுவரை யாரும் நினைத்துக்கூட பார்க்காத ஊதியத்தை ரொனால்டோவுக்கு சவுதி அரேபியா கால்பந்து கிளப் அள்ளிக் கொடுக்க முன்வந்துள்ளது. அதனடிப்படையில், ரொனால்டோவுக்கு அல்-நாசர் அணி ஆண்டொன்றுக்கு சுமார் 1,800 கோடி ரூபாவை ஊதியமாக கொடுக்கிறது.

இரண்டரை ஆண்டுகள் வரை அல்-நாசர் கிளப்பிற்காக விளையாட ஒப்பந்தமாகியுள்ள ரொனால்டோ அதற்காக மொத்தமாக 4,400 கோடி ரூபாயை ஊதியமாக பெறுகிறார்.

பார்சிலோனா அணிக்காக நீண்ட காலம் விளையாடிய மெஸ்ஸி, கடந்த 2021ம் ஆண்டு பிரான்சை சேர்ந்த பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாட ஒப்பந்தமானார். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு சுமார் 530 கோடி ரூபாயை ஊதியமாக பெறுவதாக கடந்த நவம்பரில் வெளியான ஃபோர்ப்ஸ் இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியுடன் ஒப்பந்தத்தை 2025ம் ஆண்டு வரை நெய்மர் புதிப்பித்துள்ள நெய்மர் ஆண்டொன்றுக்கு சுமார் 450 கோடி ரூபாயை ஊதியமாக பெறுவதாக ஃபோர்ப்ஸ் இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

கால்பந்து உலகில் இளம் நட்சத்திரமான கிலியான் எம்பாப்பே ஆண்டொன்றுக்கு சுமார் 890 கோடி ரூபாய் ஊதியமாக ஈட்டுகிறார்.

ரொனால்டோ சவுதி கிளப்புடன் ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு வரை எம்பாப்பே தான் உலகில் அதிக ஊதியம் வாங்கும் கால்பந்து வீரராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலவரப்படி ஊதிய அடிப்படையில் மெஸ்ஸி, எம்பாப்பே ஆகிய இருவரைக் காட்டிலும் ரொனால்டோ மிக உச்சத்தில் இருக்கிறார். ஒருவேளை பி.எஸ்.ஜி. அணியுடனான ஒப்பந்தம் முடிவுக்கு வந்த பிறகு, சவுதி கிளப்பில் மெஸ்ஸியும் களமிறங்கினால் ரொனால்டோவின் ஊதியத்தை அவர் மிஞ்சக் கூடும்.

அதே போல இளம் நட்சத்திரமான எம்பாப்பேவை தங்கள் கிளப்பிற்கு இழுக்க கோடிகளை கொட்டி கொடுக்க பல்வேறு கிளப் நிர்வாகங்கள் தயாராக இருப்பதும் அனைவரும் அறிந்ததே. அத்துடன் திறமையும் இளமையும் கொண்டவராக பார்க்கப்படும் எம்பாப்பே, பல சாதனைகளைப் படைப்பது மட்டுமின்றி ஊதியம் பெறுவதிலும் பல உச்சங்களைத் தொடுவார் என்று கால்பந்து நிபுணர்கள் கணித்துள்ளனர்.

## உலகின் மதிப்புமிக்க நிறுவனங்களில் அமேசானுக்கு முதலிடம்

சர்வதேச அளவில் பெரும் நிறுவனங்களின் பிராண்ட் மதிப்பை ஆய்வு செய்யும் 'பிராண்ட் ஃபைனான்ஸ்' அமைப்பு வெளியிட்ட 'குளோபல் 500' அறிக்கையின் படி அப்பிள் நிறுவனத்தை பின்னுக்கு தள்ளி அமேசான் நிறுவனம் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள நிறுவனங்களின் பிராண்ட் மதிப்பை கணக்கிட்டு மதிப்புமிக்க முதல் 500 நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த அப்பிள் நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு 16 சதவீதம் குறைந்து 297.5 பில்லியன் அமெரிக்க டொலருடன் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதனிடையே கடந்த ஆண்டு 2 ஆம் இடத்தில் இருந்த அமேசான் நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு 7 சதவீதம் மட்டுமே குறைந்து 299.3 பில்லியன் அமெரிக்க டொலருடன் முதலிடத்தைப் பிடித்தது.

அமேசானின் வாடிக்கையாளர் சேவை குறித்து மக்களின் கருத்து மாறியிருப்பதும், பொருள்களை விநியோகிக்க நீண்ட நேரம் எடுத்துக் கொள்வதும், அமேசான் சேவையை மற்றவர்களுக்கு வாடிக்கையாளர்கள் பரிந்துரைப்பது குறைந்தது உள்ளிட்ட காரணிகள் அமேசான் நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு குறைய காரணமாகும்.

முதலிடத்தை இழந்துள்ள அப்பிள் நிறுவனத்தைப் பொருத்த வரை விநியோகச் சங்கிலி சீர்குலைந்து ஏற்பட்ட தட்டுப்பாடு, தொழிலாளர் சந்தையில் ஏற்பட்ட பிரச்சினைகள் உள்ளிட்டவை 16 சதவீத சரிவுக்கான காரணங்களாக பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 50 தொழில்நுட்ப நிறுவனங்கள் பட்டியலில் இடம்பெற்றிருந்த நிலையில் 'ட்விட்டர்' மற்றும் 'ஸ்னெப் சாட்' நிறுவனங்கள் தற்போது பட்டியலில் இடம்பெறவில்லை.

'பிராண்ட் ஃபைனான்ஸ் குளோபல் 500' பட்டியலில் இடம்பெற்ற முதல் 10 நிறுவனங்கள் : நிறுவனம் 2023 மதிப்பு கடந்த ஆண்டு மதிப்பு சரிவு/ஏற்றம் (%)

1. அமேசான் 299.3 பில்லியன் டொலர் 350.3 பில்லியன் டொலர் 7% சரிவு
2. அப்பிள் 297.5 பில்லியன் டொலர் 355.1 பில்லியன் டொலர் 16% சரிவு
3. கூகுள் 281.4 பில்லியன் டொலர் 263.4 பில்லியன் டொலர் 7% ஏற்றம்
4. மைக்ரோசொஃப்ட் 191.6 பில்லியன் டொலர்184.2 பில்லியன் டொலர் 4% ஏற்றம்
5. வோல்மார்ட் 113.8 பில்லியன் டொலர் 111.9 பில்லியன் டொலர் 2% ஏற்றம்
6. சாம்சங் 99.7 பில்லியன் டொலர் 107.3 பில்லியன் டொலர் 7% சரிவு
7. ஐ.சி.பி.சி. 69.5 பில்லியன் டொலர் 75.1 பில்லியன் டொலர் 7% சரிவு
8. வெரிஸோன் 67.4 பில்லியன் டொலர் 69.6 பில்லியன் டொலர் 3% சரிவு
9. டெஸ்லா 66.2 பில்லியன் டொலர் 46 பில்லியன் டொலர் 44% ஏற்றம்
10. டிக்டொக் 65.7 பில்லியன் டொலர் 59 பில்லியன் டொலர் 11% ஏற்றம்

சர்வதேச தரப்பட்டியலின் முதல் 100 இடங்களில் இந்தியாவைச் சேர்ந்த பாரம்பரியமிக்க 'டாடா நிறுவனம்' மட்டுமே இடம்பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் 78 ஆம் இடத்தில் இருந்த டாடா நிறுவனம் தற்போது 69 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்ஃபோசிஸ் நிறுவனம் கடந்தாண்டின் 158 ஆவது இடத்திலிருந்தது. தற்போது 150 ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது. 2020 ஆம் ஆண்டில் இருந்து இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு 84 சதவீதம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.